# சைவ போதினி



## இரண்டாந் தரம்

கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு

உ

சிவமயம்

உ
கொழும்பு
விவேகானந்த சபையின்

# சைவ போதினி

## இரண்டாந் தரம்

### (பாலர் பிரிவு - I)

அரசினரின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பெற்றது.

1971

உரிமை பெற்றது ] [ விலை சதம் 75

# பதிப்புரை

கல்வியமைச்சின் பாடத்திட்டமும், சபையின் பாடத்திட்டமும் ஒன்றோடு ஒன்று முரண்படாமலும், சைவ சமயங் கற்பித்தலிற் சைவாசிரியர்கள் சிரமமுறாமலும் இருத்தற்பொருட்டுக் கல்வியமைச்சினாலே தயாரிக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக இச் சைவ போதினி தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் வரும் விடயங்கள், பாடத்திட்டத்திற் காட்டியவாறு மூன்று பருவங்களாகப் பகுக்கப்பட்டுள. விடயங்கள் யாவும் இலகுவிற் போதிக்கக்கூடிய முறையிலே மாணவரது அத்திவார அறிவுக்குந் தகுதிக்கும் பொருந்துமாறும், இன்றியமையாத இடங்களிலே ஒன்றோடு மற்றது தொடர்புறுமாறும் வகுத்து எழுதப்பட்டுள.

கடந்த நாற்பத்திரண்டு வருடங்களாக இச்சபையாரால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வரும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சையும், இப் பரீட்சையின் அடிப்படைக் காரணமாகிய சைவ சமய போதனையும் மேன்மேலும் விருத்தியடைந்து வருவதற்கு "சைவ போதினி" ஒரு பற்றுக்கோடாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இதில் வரும் விடயங்களை ஒழுங்குபடத் தொகுத்து அமைத்து எழுதியுதவிய சைவப் பெரியார்களுக்குச் சபையின் நன்றி உரித்தாகும்.

"குற்றங் களைந்து குணமளைந்து கொள்ளுதல், கற்றறிந்த மாந்தர் கடன்" என்பதற்கமைய, இப்புதிய பதிப்பிற் குறைகள், பிழைகள் இருப்பின் அவற்றை எமக்கு அறிவிக்குமாறு அன்பர்கள் வேண்டப்படுகின்றனர்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

*34, விவேகானந்த மேடு,*
*கொழும்பு-13.*
*16-3-71*

**கொழும்பு**
**விவேகானந்த சபையார்.**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவ போதினி

## இரண்டாந் தரம்

## பொருளடக்கம்

### முதலாம் பருவம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | விநாயகக் கடவுள் ... | 1 |
| 2. | உமாதேவியார் ஞானப்பால் கொடுத்தருளியமை ... | 3 |
| 3. | சம்பந்தர் தேவாரம் : ''தோடுடைய செவியன்....'' ... | 7 |
| 4. | சம்பந்தர் தேவாரம் : ''பிடியத னுருவுமை....'' ... | 9 |
| 5. | கொன்றை வேந்தன் : 1–13 வரிகள் ... | 11 |
| 6. | திருக்கோவிலுக்குச் செல்லும் முறை ... | 14 |
| 7. | அப்பர் தேவாரம் : ''ஆக்கையாற் பயனென்....'' ... | 17 |
| 8. | திருக்கோவிலில் வழிபடும் முறை ... | 19 |
| 9. | கொன்றைவேந்தன் : 14–25 வரிகள் ... | 22 |
| 10. | சிவபெருமான் கல்லானைக்குக் கரும்பு தீற்றியமை ... | 24 |


### இரண்டாம் பருவம்


| | | |
|---|---|---|
| 11. | நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ... | 28 |
| 12. | அப்பர் தேவாரம் : ''கால்களாற் பயனென்....'' ... | 32 |
| 13. | கொன்றைவேந்தன் : 26–36 வரிகள் ... | 34 |
| 14. | திருநாவுக்கரசு நாயனாரை நீற்றறையில் இட்டமை ... | 36 |

15. அப்பர் தேவாரம் :
''மாசில் வீணையும்....'' .. 40
16. கொன்றைவேந்தன் : 37–47 வரிகள் ... 42
17. சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்தருளியமை .. 44
18. திருவாசகம் :
''பூசுவதும் வெண்ணீறு....'' ... 50
19. திருக்கோவிலிலே செய்யும் திருத்தொண்டுகள் .. 52
20. நமிநந்தி அடிகள் ... 55
21. கொன்றைவேந்தன்: 48-58 வரிகள் ... 58

## மூன்றும் பருவம்

22. புண்ணியங்கள், பாவங்கள் (சைவ வினு விடை முதற்புத்தகம், புண்ணிய பாவ இயல்) .. 62
23. சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரம் பாடியருளியமை .. 64
24. சுந்தரர் தேவாரம் :
''பித்தா பிறை சூடி....'' .. 68
25. கொன்றைவேந்தன் : 59-69 வரிகள் ... 70
26 செங்கட்டிகள் பொன் கட்டிகளானமை .. 72
27. சுந்தரர் தேவாரம் :
''பொன்னுர் மேனியனே ..'' .. 75
28. கொன்றைவேந்தன்: 70-80 வரிகள் ... 77
29 சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இட்டருளியமை ... 79
30. திருப்புராணம் :
''உலகெலாம்....''
''மண்ணுலகத்தினிற் பிறவி....'' ... 83
31. கந்தசுவாமியாரும் ஔவையாரும் .. 86
32. கொன்றைவேந்தன் : 81–91 வரிகள் 90

# முதலாம் பருவம்



விநாயகக் கடவுள்

உ
சிவமயம்

# சைவ போதினி

## இரண்டாந் தரம்
## முதலாம் பருவம்

பாடம்: 1

## விநாயகக் கடவுள்

பிரணவப் பொருளாம்
பெருந்தகை ஐங்கரன்
சரண வற்புதமலர்
தலைக்கணி வோமே.

சிவபெருமானை வழிபடும் சமயம், சைவ சமயம் எனப்படும். சிவபெருமான் உயிர்களுக்கு அருள்செய்யும் பொருட்டு விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் என்னும் நான்கு திருக்குமாரர்களைத் தந்தருளினார். அவர்களுள் விநாயகர் மூத்த திருக்குமாரராவர்.

விநாயகக் கடவுளுக்கு வேறு பல திருநாமங்களும் உண்டு. பிள்ளையார், கணபதி, விக்கினேசுவரர் என்பன அவற்றுட் சில திருநாமங்களாகும்.

விநாயகக் கடவுள் யானை முகமும் ஐந்து திருக்கரங்களும் உள்ளவர். அவருடைய வாகனம் பெருச்சாளி.

விநாயகக் கடவுளைப் பத்தியோடு வழி படுபவர்கள், சிறந்த அறிவையும் விரும்பிய செல்வங்களையும் பெறுவார்கள்; பேரின்பம் அடைவார்கள்.

விநாயகக் கடவுளை வணங்கியே, நாம் எந்தக் கருமத்தையும் தொடங்குதல் வேண் டும். அப்படித் தொடங்கும் கருமங்கள், இடையூறு இல்லாமல் நிறைவேறும்.

பயிற்சி

1. பொருள் அறிக:

| | | |
|---|---|---|
| குமாரர் | நாமம் | கரம் |
| பேரின்பம் | கருமம் | இடையூறு |

2. கோடிட்ட இடங்களை நிரப்புக:

(அ) சிவபெருமானை வழிபடும் சமயம்——— எனப்படும்.

(ஆ) சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் ———, வைரவர், வீரபத்திரர், ——— என்னும் நால்வருமாவர்.

(இ) விநாயகக் கடவுளுடைய வாகனம் ———.

(ஈ) விநாயகக் கடவுள்——— முகமும் ——— திருக்கரங்களும் உள்ளவர்.

(உ) விநாயகக் கடவுளை வணங்குபவர்கள் ———, ———, ——— என்பவற்றைப் பெறுவார்கள்.

3. விநாயகக் கடவுளின் வேறு திருநாமங்கள் சில கூறுக.


பாடம் : 2

# உமாதேவியார் ஞானப்பால் கொடுத்தருளியமை

தென் இந்தியாவிலே சீகாழி என ஒரு தலம் உண்டு. அங்கே சிவபாதவிருதயர் என்னும் பிராமணர் ஒருவர் வசித்து வந்தார். அவருடைய மனைவியாரின் பெயர் பகவதியார். அவர்கள் சிவபெருமானிடத்திலே மிகுந்த பத்தி உடையவர்கள். அவர்கள் தினமும் சீகாழியிலுள்ள தோணியப்பரை வழிபட்டனர். தோணியப்பரது அருளினாலே அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

குழந்தைக்கு மூன்று வயதாயிற்று. அப்பொழுது ஒருநாள் சிவபாதவிருதயர் வழமைபோலக் கோயிலுக்குப்போனார். குழந்தையும் அவருக்குப் பின்னே சென்றது. அவர் குழந்தையை வரவேண்டாமென்று தடுத்தார். குழந்தை அழுதது. அதனால், குழந்தையையுங் கூட்டிச் சென்றார்.

கோயிலுக்குச் செல்வதற்குமுன் குளிக்க வேண்டியது அவசியம். அதனால், சிவபாதவிருதயர் கோயிலுக்குப் பக்கத்திலிருந்த குளத்துக்குச் சென்றார். குழந்தையைக் குளக் கரையிலே இருத்தினார். தான் குளத்தில் இறங்கித் தண்ணீரில் மூழ்கி நீராடினார்.



உமாதேவியார் குழந்தைக்குத் தமது
திருமுலைப் பாலைக் கிண்ணத்திலிட்டு ஊட்டுதல்.

குழந்தை தகப்பனுரைக் காணுமல், 'அம்மே, அப்பா' என அழுதது. அது தகப்பனுருக்குக் கேட்கவில்லை. ஆனுல், உலகமாதாவாகிய உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் கேட்டது. அது முற்பிறப்பிலே புண்ணியஞ் செய்த புண்ணியக் குழந்தை. ஆனபடியால், சிவபெருமான் உமாதேவியாருடன் குழந்தையின் முன் தோன்றினுர். குழந்தை அவர்களைக் கண்டது.

உமாதேவியார் தமது திருமுலைப் பாலைக் கிண்ணத்திலிட்டு ஊட்டினுர். உமாதேவியார் ஊட்டிய ஞானப் பாலைக் குழந்தை உண்டது. உடனே, குழந்தையின் அழுகை நீங்கியது. அது மிகுந்த ஆனந்தம் கொண்டது. சிவபெருமானும் உமாதேவியாரும் மறைந்தனர்.

சிவபாதவிருதயர் நீராடியபின் வெளியே வந்தார். குழந்தையைப் பார்த்தார். குழந்தையின் வாயிலே பால் வடிந்திருந்தது. "உனக்குப் பால் தந்தவர் யார்?" என்று கேட்டுக் குழந்தையை உறுக்கினுர். குழந்தை தோணியப்பரது கோயிலைச் சுட்டிக்காட்டி, "தோடுடைய செவியன்" என்னும் தேவாரத்தைப் பாடிற்று.

சிவபாதவிருதயர் மிகவும் ஆச்சரியம் அடைந்தார். தமது குழந்தை ஒரு தெய்வக் குழந்தை என உணர்ந்தார். ஞானப் பால் உண்டமையால் குழந்தை ஞானசம்பந்த ராயிற்று. இக்குழந்தையே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் ஆவர்.

பயிற்சி

1. கோடிட்ட இடங்களிற் கீழேயுள்ள சொற் களிற் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்பி எழுதுக.

(ஞானப்பால்; அம்மே, அப்பா; தோடுடைய செவியன்; சீகாழி)

(அ) சிவபாதவிருதயர்——என்னும் ஊரிலே வசித்தார்.

(ஆ) குளக் கரையிலிருந்து குழந்தை —— என அழுதது.

(இ) உமாதேவியார் குழந்தைக்கு —— ஊட்டினர்.

(ஈ) ஞானசம்பந்தர்——என்னும் தேவாரத்தை முதலிற் பாடினர்.

2. தோணியப்பரது கோயில் எங்கேயுண்டு ?

3. கோயிலுக்குச் செல்லு முன் யாது செய்தல் வேண்டும் ?

பாடம் : 3

# சம்பந்தர் தேவாரம்

## திருப்பிரமபுரம்

**சிவபாதவிருதயர், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைப் பார்த்து, "உனக்குப் பால் தந்தவர் யார்?" என்று கேட்டார். நாயனார், தோணியப்பரது கோயிலைச்சுட்டிக்காட்டிப் பின்வரும் தேவாரத்தைப் பாடியருளினார்.**

*முதலாம் திருமுறை* *பண் : நட்டபாடை*

*திருச்சிற்றம்பலம்*

தோடுடைய செவியன் விடையேறிஓர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்
தேத்தஅருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவனன்றே.

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— விடை - இடப வாகனம். தூ - சுத்தமான. காடுடைய சுடலைப் பொடி - சுடலைக் காட்டிலுள்ள சாம்பல். ஏடு - பூவின் இதழ். பீடு - பெருமை. பெம்மான் - பெருமான், கடவுள். இவன் - திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் சுட்டிக்காட்டிய சிவபெருமான்.

பொருள் :— தோடு அணிந்த காதை உடையவன்; இடபவாகனத்தின்மேல் ஏறி வருபவன்; சடையிலே பிறையை அணிந்தவன்; திருமேனியிலே சுடலைச் சாம்பலைப் பூசியவன் - இப்படியான தோற்றத்தோடு வந்து என் மனத்தைத் தன்னிடம் இழுத்தவன். முற்பிறப்பிலே இதழ்களை உடைய பூக்களை இட்டு நான் வழிபட்டமையால் இப்போது எனக்கு அருள் செய்தவன். பெருமை பொருந்திய அப் பெருமான் சீகாழிக் கோயிலிலே இருக்கின்ற இந்தச் சிவபெருமானே.

### பயிற்சி

1. தேவாரத்தை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.

தோடுடைய—— விடையேறியோர்
    தூவெண்—— சூடி
காடுடைய சுடலைப்—— பூசிஎன்
    உள்ளங்கவர்——
ஏடுடைய—— முனைநாட்பணிந்
    தேத்த—— செய்த
——பிரமாபுர மேவிய
    ——இவனன்றே.

பாடம் : 4

# சம்பந்தர் தேவாரம்

## திருவலிவலம்

ஞானப்பால் உண்ட குழந்தையாகிய திரு ஞானசம்பந்தரைப் பற்றிப் படித்தோம். அவர் பல கோயில்களுக்கும் சென்று சிவபெரு மானை வணங்கினார்; தேவாரங்கள் பாடித் துதித்தார்.

அவர் ஒருமுறை திருவலிவலம் என்னும் தலத்துக்குச் சென்றார். அங்கே உள்ள சிவ பெருமானைத் தேவாரம் பாடி வணங்கினார். அந்தத் தேவாரங்களில் ஒன்று இங்கே இருக் கிறது.

*முதலாம் திருமுறை* *பண் : வியாழக்குறிஞ்சி*

*திருச்சிற்றம்பலம்*

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே. 2

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— கணபதி-பிள்ளையார்; வலிவலம் - திருவலிவலம்.

பொருள் :— திருவலிவலமென்னும் தலத்திலுள்ள சிவபெருமான் அடியவர்களுக்கு மிக்க அருளைச் செய்பவர். அவர் தம்மை வணங்கும் அடியவர்களது துன்பத்தை நீக்குவதற்காகப் பிள்ளையாரைத் தோன்றுமாறு அருள் செய்தார். அவரை வணங்குவோமாக.

பயிற்சி

1. தேவாரத்தை மனனஞ் செய்க.

2. விட்ட இடங்களை நிரப்பி எழுதுக:

பிடியதன் உரு————மிகு கரியது
————தனதடி வழிபடு மவரிடர்
கடி————வர அருளினன்————
வடிவினர் பயில்————முறை———.

பாடம் : 5

# கொன்றை வேந்தன் (அ)

கொன்றை என்பது ஒரு மரம். அதன் பூக்கள் கொத்துக் கொத்தாக இருக்கும். அடியார்கள் அவற்றை மாலையாக்கிச் சிவ பெருமானுக்கு அணிவார்கள். அதனால், சிவ பெருமானுக்குக் கொன்றை வேந்தன் எனவும் ஒரு பெயர் உண்டு.

கொன்றை வேந்தன் என்னும் பெயருடைய ஒரு புத்தகமும் உண்டு. அதனை ஔவையார் என்னும் புலவர் பாடினார். அவர், கொன்றை வேந்தன் ஆகிய சிவபெருமானை முதலில் வணங்கி இதனைப் பாடினார். அதனால், கொன்றை வேந்தன் என இப்புத்தகத்துக்குப் பெயர் உண்டானது.

## சிவ வணக்கம்

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே,

பொருள் :— நாம், கொன்றைப்பூமாலை அணிந்த சிவபெருமானது திருவடிகளை எப்போதும் வணங்குவோமாக.

## நூல்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

8. ஏவா மக்கள் மூவா மருந்து.

9. ஐயம் புகினும் செய்வன செய்.

10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு.

11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.

12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.

13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.

## பொருள்

1. தாயும் தந்தையுமே நாம் முதலிற் கண்ட தெய்வங்களாவார்.
2. கோயிலுக்குப்போய்க் கடவுளை வணங்குவது மிகவும் நல்லது.
3. இல்லறமே மேலான அறமாகும்.
4. கொடாதவருடைய செல்வத்தைக் கள்வர் முதலிய தீயவர்கள் அபகரிப்பார்கள்.
5. போசனம் குறைதல் பெண்களுக்கு அழகு தரும்.
6. ஒருவன் ஊரிலுள்ளவர்களுடன் பகைத்தால், அவன் தன் சந்ததியோடு தானுங் கெடுவான்.
7. கணிதமும் மொழியும் கண்களைப் போலச் சிறந்தவை.
8. பெற்றோர்க்குத் தேவையானவற்றைக் குறிப்பறிந்து செய்கிற பிள்ளைகள் அப்பெற்றோர்க்குத் தேவாமிர்தம் போன்றவர்கள்.
9. பிச்சை எடுத்தாயினும் செய்யவேண்டிய நல்ல கடமைகளைச் செய்.
10. கடவுள் ஒருவரைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்.
11. பிராமணர்களுக்கு, வேதம் ஓதுதலிலும் ஒழுக்கமே சிறந்தது.
12. பொருமை காரணமாகப் பொய்பேசுதல் செல்வத்தை அழிக்கும்.
13. தானியத்தையும் பணத்தையும் வீண்செலவு செய்யாமற் சம்பாதி.

### பயிற்சி

1. இப்பகுதிப் பாடல்களை மனனஞ் செய்க
2. கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.

அன்னையும் பிதாவும் ——— தெய்வம்.<br>
ஊருடன்———— வேருடன் கெடும்.<br>
———— பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.<br>
ஏவா மக்கள் மூவா————.

பாடம் : 6

# திருக்கோயிலுக்குச் செல்லும் முறை

கடவுள் எங்கும் இருக்கிறர். அவரை எங்கும் வணங்கலாம். ஆயினும், கோயிலிலே கடவுளை வணங்குவதே நல்லமுறை. பசுவினது இரத்தத்திலிருந்தே பால் உண்டாகிறது. இரத்தம் பசுவினது உடல் முழுவதும் பரந்திருக்கிறது. ஆயினும், நாம் பாலைப் பசுவின் மடியிலிருந்தே பெறுகிறேம். அதுபோலவே கடவுள் எங்கும் இருந்தாலும் கோயிலுக்குச் சென்று வணங்குதலே தக்க முறை.

நாம் கோயிலுக்குத் தினமும் சென்று வணங்குவது நன்று. எந்த நேரத்திலும் நாம் கடவுளை வணங்கலாம். ஆயினும் காலையும் மாலையுமே கடவுளை வணங்குவதற்குச் சிறந்த நேரங்களாம்.

தினமும் கோயிலுக்குச் செல்ல முடியாதவர் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலாவது போதல் வேண்டும். பூரணை, அமாவாசை, வருடப் பிறப்பு முதலிய விசேட நாட்களிற் கோயிலுக்குச்சென்று வணங்குதல் வேண்டும்.

கோயிலுக்குப் போவதற்கு முன் நீராடுதல் வேண்டும். தோய்த்து உலர்ந்த ஆடையை உடுத்தல் வேண்டும். விபூதி பூசுதல் வேண்டும். கடவுளை மனத்திலே தியானித்துச் 'சிவ சிவ' என்று சொல்லிக்கொண்டு கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும்.

கோயிலுக்குப் போகும்போது பால், இளநீர், பூ, பழம், வெற்றிலை, பாக்கு, கருப்பூரம் முதலியவற்றைக் கொண்டுசெல்லுதல் வேண்டும். அப்பொருள்களைச் சுத்தமான தாம்பாளத்தில் அல்லது கூடையிலே வைத்துச் செல்வது நன்று. அக்கூடையைக் கீழே தூங்கப் பிடியாது அரைக்கு மேலே தூக்கிச் செல்லுதல் வேண்டும்.

கோயிலுக்குப் போனவுடன் கோபுரத்தை வணங்குதல் வேண்டும். அருச்சனைக்குரிய பொருள்களை நீர் தெளித்துச் சுத்தப்படுத்துதல் வேண்டும். கால் கழுவிக் கொண்டு கோயில் வாசலிலே சென்று நந்தி பகவானை வணங்கிக் கொண்டு கோயிலுக்குள்ளே செல்லுதல் வேண்டும்.

## பயிற்சி

1. கடவுளை எங்கே வணங்குவது நல்லது ?

2. பொருத்தமான சொல்லைச் சேர்த்து வாசிக்கவும்.

(அ) நாம் கோவிலுக்குப் போகு முன்—— வேண்டும்.

(ஆ) கோவிலுக்குப் போகும்போது—— பழம், பூ,————முதலியவற்றைக் கொண்டு போதல் வேண்டும்.

(இ) கோவிலுக்குக் கொண்டு போகும் பொருள்களை——— மேலே தூக்கிச் செல்லுதல் வேண்டும்.

பாடம் : 7

# அப்பர் தேவாரம்

## திரு அங்கமாலை

எமது உடம்பை எமக்குத் தந்தவர் கடவுள். நாம் அவரை வழிபட்டு நன்மை அடைவதற்காகவே, அவர் இந்த உடம்பைத் தந்தருளினார். உடம்பினால் நாம் என்ன செய்தல் வேண்டும் என்பதைக், கீழே உள்ள தேவாரம் கூறுகின்றது.

*நான்காம் திருமுறை* — *பண் : சாதாரி*

*திருச்சிற்றம்பலம்*

ஆக்கை யாற் பயனென்
அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றிஎன் னாதஇவ்
ஆக்கை யாற் பயனென்.

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— ஆக்கை-உடம்பு. அரன்-கடவுள், சிவபெருமான். அட்டி - அள்ளி இட்டு. போற்றி - வணக்கம். என்னாத - என்று சொல்லாத.

பொருள் :— நாம் இறைவன் எழுந்தருளி இருக்கும் திருக்கோயிலுக்குப் போதல் வேண்டும்,

அக்கோயிலை வலம்வருதல் வேண்டும். கைகளி ளுலே பூக்களை அள்ளிக் கடவுளுக்கு இட்டு வணங்குதல் வேண்டும் – இப்படி வழிபடாத உடம் பிஞல் ஒரு பயனும் இல்லை.

பயிற்சி

1. தேவாரத்தை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.

ஆக்கை யாற் பயனென்
——— கோயில் ——— வந்து
—க்கையால் ——— போற்றி என்ளுதஇவ்
ஆக்கை யாற் ———.

பாடம் : 8


# திருக்கோவிலில் வழிபடும் முறை

கோவிலுக்கு எப்படிச் செல்லவேண்டு மென்பதை முன்னொரு பாடத்திலே படித்தோம். கோவிலுக்குச் சென்றவுடன் முதலில் நந்திதேவரை வணங்குதல் வேண்டும். பின்னர் கோவிலுக்குட் சென்று மூலத்தானக் கடவுளை வணங்கிக்கொண்டு பிள்ளையார் சந்நிதிக்குச் செல்லுதல் வேண்டும். அவரை வணங்கும்போது கைகளை முட்டியாகப்பிடித்து நெற்றியிலே மூன்று முறை குட்டுதல் வேண்டும். பின்னர் கைகளாற் காதுகளை மாறிப் பிடித்து மூன்று முறை தோப்புக்கண்டம் இடுதல் வேண்டும்.

பிள்ளையாரை வணங்கிய பின், உமாதேவியார், கந்தசுவாமியார், வீரபத்திரர் முதலிய தெய்வங்களை வணங்குதல் வேண்டும்; வணங்கும்போது கைகளை மார்புடனுவது சிரசிலாவது வைத்து வணங்குதல் வேண்டும்.

கோவில்களிலுள்ள மூர்த்திகளை வணங்கிய பின் கைகளைக் குவித்துக்கொண்டு வீதியை வலம் வருதல் வேண்டும். அவ்வாறு மூன்று முறையாயினும் செய்தல் வேண்டும். அப்

பொழுது தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாடல்களைப் பாடுதல் வேண்டும். பின்னர் சந்நிதானத்தில் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.



அட்டாங்க நமஸ்காரம்

தலை, கைகள் இரண்டு, காதுகள் இரண்டு, தோள்கள் இரண்டு, மோவாய் ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்த வணங்குவது அட்டாங்க நமஸ்காரமாகும்.



பஞ்சாங்க நமஸ்காரம்

தலை, முழந்தாள்கள் இரண்டு, கைகள் இரண்டு என்பன நிலத்திலே பொருந்த வணங்குவது பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும். இவ்வாறு வணங்கிய பின் கோவிலிலே ஓரிடத்தில் இருந்து அருட்பாடல்களைப் பாடுதல் வேண்டும்.

கோவிற் பூசை நடைபெறும்போது ஒழுங்காக நின்று சுவாமியை வணங்குதல் வேண்டும். கடைசியாகச் சண்டேசுரரை வணங்குதல் வேண்டும்.

விசேட திருவிழாக் காலங்களில் வீதியை அங்கப்பிரதட்சணம் செய்து வணங்குவார்கள்.

பயிற்சி

1 அட்டாங்க நமஸ்காரம் எப்படிச் செய்தல் வேண்டும்?
2. பஞ்சாங்க நமஸ்காரம் எப்படிச் செய்தல் வேண்டும்?
3. அங்கப்பிரதட்சணமாவது யாது?
4. முதலில் யாரை வணங்கல் வேண்டும்?
5. பிள்ளையாரை எப்படி வணங்கல் வேண்டும்?
6. ஆண்பிள்ளைகள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்பிள்ளைகள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து பழகுக.

பாடம் : 9

# கொன்றை வேந்தன் (ஆ)

14. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.
15. காவல் தானே பாவையர்க்கு அழகு.
16. கிட்டாது ஆயின் வெட்டென மற.
17. கீழோர் ஆயினும் தாழ உரை.
18. குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.
19. கூரம்பு ஆயினும் வீரியம் பேசேல்.
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்.
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
23. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி.
24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.

பொருள் :

14. பெண்களுக்குக் கற்பு என்று சொல்லப்படுவது, கணவர் சொற்படி நடத்தல்.

15. கற்புக்கு அழிவுவராமற் காத்துக்கொள்வதே பெண்களுக்கு அழகு.

16. விரும்பிய ஒரு பொருள் கிடையாதானால் உடனே அதை மறந்துவிடு.

17. உன் சொல்லைக் கேட்பவர் கீழ்ப்பட்டவ ராயிருந்தாலும், அவருடன் தாழ்மையா கப் பேசு.

18. பிறரிடமுள்ள குற்றங்களை ஆராய்ந்து பார்த்தால் உறவாபவர் ஒருவரும் இல்லை.

19. உன் கையிலே இருப்பது கூர்மையான அம்பு ஆனாலும், நீ வீணாக வீரம்பேசாதே.

20. சிநேகிதன் கேடு செய்தால், அவனது சிநேகத்தை விடுவது நல்ல செயல்.

21. கைப்பொருள் இழந்த காலத்தில் மனம் தளராதிருத்தல், பொருளைச் சேர்க்கும்.

22. கையில் உள்ள பொருளைப் பார்க்கிலும் மெய்ப்பொருளாவது கல்வியாம்.

23. ஒருவனை அரசன் அறிந்திருத்தல், அவ னுக்கு ஆபத்து வருங்காலத்தில் உதவி யாகும்.

24. கோள் கேட்கும் குணமுடைய ஒருவனது காதிலே பிறனொருவன் சொல்லும் கோளானது, காற்றுடன் சேர்ந்த நெருப் புப் போன்றது.

25. ஒருவன் பிறர்மேற் பழிசொன்னால், அவன் எல்லாருக்கும் பகைவனாவான்.

பயிற்சி

1. இப்பகுதிப் பாடல்களை மனனஞ் செய்க.
2. கோடிட்ட இடங்களை நிரப்புக:

கிட்டாது ஆயின் வெட்டென ——.
கீழோர் ஆயினும் ——உரை.
——ஆயினும் வீரியம் பேசேல்.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் ——.

பாடம் : 10

# சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு தீற்றியது

அபிடேக பாண்டியன் மதுரையை அரசாண்ட காலத்திலே ஒரு சித்தர் மதுரைக்கு வந்து பல அற்புதங்களைச் செய்தார். அவர் யாவரும் காணத் திடீரென மறைவார். தூரத்தில் உள்ள பொருள்களைக் கிட்ட வரும்படி செய்வார். கிட்ட உள்ள பொருள்களை அதி தூரத்திலே தோன்றுமாறு செய்வார். வைகையாற்று நீரைத் திடீரென்று பெருகச் செய்வார். மீள வற்றும்படி செய்வார். கடல் நீரை நல்ல நீராக்குவார். இப்படிப் பல அற்புதச் செயல்களை அவர் செய்வதை அறிந்த மன்னன் அவரைத் தன்னிடம் வரும்படி அழைத்தான்.

அரசனாலே தனக்கு ஆகக்கூடியது ஒன்றுமில்லை என்று அவர் போக மறுத்துவிட்டார். பாண்டிய மன்னன் தானே அப்பெரியாரிடம் சென்றான். அவர் புலித் தோலின் மீது இறுமாப்புடனிருந்தார். பாண்டியன் அவரது நாட்டையும், ஊரையும், பெயரையும் விசாரித்தான். அவர் எல்லா நாட்டிலும் எல்லா

ஊரிலும் வாழும், எல்லாம் செய்ய வல்ல சித்தர் என்று, தம்மைப் பற்றிக் கூறினார்.

அப்பொழுது ஒருவன் பாண்டிய மன்னனுக்குக் கரும்பொன்றைக் கொண்டுவந்து கொடுத்தான். மன்னன், "நீர் எல்லாம் வல்ல சித்தராயின், இதோ இந்தக் கரும்பைப் பக்கத்திலுள்ள கல்லானை உண்ணும்படி செய்வீராயின், சோமசுந்தரக் கடவுள் நீரே; நீர் விரும்பியது தருவேன்" என்றான். சித்தர் புன்முறுவல் தவழ, "உன்னிடம் யாம் பெற வேண்டியது ஒன்றும் இல்லை; உன்னாசை தீர நாமே உனக்கு வேண்டியது தருவோம். இதோ கல்லானை கரும்பு கறிப்பதைப் பார்" என்று கூறி, அந்த யானைமீது கடைக்கண் சாத்தினார்.

அவ்வளவில், அக்கல்லானை வாய்திறந்து ஆரவாரித்துப் பாண்டியன் கையிலுள்ள கரும்பைப் பறித்துக் கறித்தது. சாறு கடைவாயால் வழியப் பருகிச் செருக்குடன் நின்றது. சித்தர் யானைமீது கரத்தை வைத்து, அருளுடன் அதனைப் பார்த்தருளினார். அது கல்லாக மாறிற்று. பின் சித்தர் திடீரென மறைந்தருளினார்.

பாண்டியன், மதுரைச் சோமசுந்தரப் பெருமானே செய்த திரு விளையாடல் அஃது என அறிந்தான். தன் பிழையைப் பொறுத் தருளுமாறு பன்முறை வேண்டித் துதித் தான். பெருமான் அவனுக்குத் திருவருள் புரிந்தார்.

### பயிற்சி

1. சித்தர் செய்த அற்புதங்கள் எவை?
2. பாண்டியன் சித்தரை நாடு, ஊர், பெயர் விசாரித்தபோது அவர் என்ன விடை சொன்னார்?
3. சித்தர் மறைந்ததும் பாண்டியன் யாது கூறித் துதித்தான்?

# இரண்டாம் பருவம்

பாடம்: 11

# நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

நல்லூர், யாழ்ப்பாணப் பட்டணத்துக்கு அருகிலுள்ள ஓர் ஊர். யாழ்ப்பாணத்தை முற்காலத்திலே தமிழ் இராசாக்கள் ஆட்சி செய்தார்கள். அவர்களது மாளிகைகளும் நல்லூரிலேயே இருந்தன. அதனுல், அவர்கள் தாம் வணங்குவதற்காக அங்கே ஒரு கந்தசுவாமி கோவிலைக் கட்டினுர்கள்; திருவிழாக்களையும் நித்திய பூசைகளையும் சிறப்பாக நடாத்திஞர்கள். பின்னர் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய பிற தேசத்தவர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தார்கள்.


போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் கிறிஸ்த சமயத்தவர்கள். அவர்கள் தமது சமயத்தை யாழ்ப்பாணத்திலே பரப்ப எண்ணிஞர்கள். அதனுல் அவர்கள் சைவ சமயக் கோவில்களை இடித்தார்கள்; நல்லூர்க்கந்தசுவாமிகோவிலையும் அழித்தார்கள். அதனுல் சைவ சமய அடியார்கள் மிகவும் மனம் வருந்திஞர்கள்; தமது மனவருத்தத்தை நீக்கும்படி கடவுளை வேண்டிஞர்கள்.

சில காலஞ் செல்ல, அந்த அடியவர்களது முயற்சியினாலே, நல்லூரிலே கந்தசுவாமி கோவில்திரும்பவும் கட்டப்பட்டது. அக்கோவில் மிகவும் அழகானது. கிழக்கு வாயிலிலும் தெற்கு வாயிலிலும் அழகான கோபுரங்கள் இருக்கின்றன. கோவிலைச் சுற்றி உள்வீதி அமைந்துள்ளது. கோவிலின் வடக்குப் பாகத்தில் ஒரு பூந்தோட்டம் இருக்கிறது. இவற்றைச் சுற்றிவர அலங்காரமான மதில் உண்டு.

சுற்றுமதிலுக்கு வெளியே வெளிவீதி இருக்கிறது. தெற்குப் பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலும் தெரு வீதிகளே வெளி வீதிகளாயிருக்கின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மிகவும் அழகானகோவில். இங்கே நித்தியபூசைகளும் திருவிழாக்களும் நேரகாலந் தவறுமல் ஒழுங்காக நடைபெறும்.

கந்தப் பெருமாள் கோவில் கொண்ட அந்தக் கோவிலிலே பிள்ளையார், ஆறுமுக சுவாமி, வள்ளியம்மை, தெய்வயானையம்மை, விஷ்ணு, பழனியாண்டவர் முதலிய திரு உருவங்கள் இருக்கின்றன.



நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் ஆவணி மாதத்திலே திருவிழா நடைபெறும். திருவிழா இருபத்தைந்து தினங்கள் நடைபெறும். பத்தாந்திருவிழா மஞ்சத்திருவிழா. இருபத்து நான்காம் திருவிழா தேர்த் திருவிழா ஆகும். தேர்த் திருவிழாவிற்கும், அடுத்த நாள் நடைபெறும் தீர்த்தத் திருவிழாவிற்கும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் செல்வார்கள். ஆவணி மாசத்து அமாவாசையிலன்று தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

பிள்ளைகளே, நீங்களும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குப் போய் வணங்கினுல் முருகப் பெருமான் உங்களுக்குப் பல அனுக்கிரகங்களைச் செய்வார்.

பயிற்சி

1. கோடிட்ட இடங்களை நிரப்பி வாசிக்க.
   (அ) நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில்—— தினங்கள் திருவிழா நடைபெறும். இருபத்து நான்காம் திருவிழா——— திருவிழாவாகும்.
   (ஆ) கோவிலின் ——பக்கத்திலும் தெற்குப் பக்கத்திலும் கோபுரங்கள் இருக்கின்றன.
   (இ) பூந்தோட்டம் கோவிலின்———திசையில் இருக்கிறது.
2. கோவிலிலே காணப்படும் திருவுருவங்கள் சில கூறுக.

பாடம் : 12

# அப்பர் தேவாரம்

## திருஅங்கமாலை

கடவுள் தம்மை வழிபடுவதற்காக, நமக்குத் தந்த உடம்பிலே பல உறுப்புக்கள் இருக்கின்றன. அவை : தலை, கண், செவி, வாய், மூக்கு, கை, கால் முதலியன. இந்த உறுப்புக்களால் நாம் கடவுளை வழிபடுதல் வேண்டும்.

கீழே உள்ள தேவாரம், நாம் கால்களினால் எப்படி வழிபட வேண்டும் என்பதைக் கூறுகின்றது.

*நான்காம் திருமுறை* *பண் : சாதாரி*

*திருச்சிற்றம்பலம்*

கால்க ளாற்பயனென்
கறைக் கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்க ளாற்பயனென்.

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— *கறைக்கண்டன்* - இருண்ட கழுத்தை உடையவன், சிவபெருமான். *உறை* - எழுந்தருளி இருக்கும். *கோலம்* – அழகு. *கோகரணம்* – வட

நாட்டில் உள்ள ஒரு திருக்கோவிலின் திருப்பெயர். சூழா - வலம் வராத. (சூழல் - சுற்றிவருதல், வலம் வருதல்).

பொருள் :— நாம், சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் திருக்கோவிலுக்குச் சென்று, வீதிவலம் வந்து வணங்குதல் வேண்டும். இப்படி வழிபடுவதற்கு நடவாத கால்களினால் ஒருபயனும் இல்லை.

பயிற்சி

1. தேவாரத்தை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.

கால்க ளாற் பயனென்<br>
கறைக்——— உறை கோயில்<br>
கோலக் கோபுரக்——— சூழாக்<br>
கால்க ளாற்———.

---

பாடம் : 13

# கொன்றை வேந்தன் (இ)

26. சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை.
27. சான்ருேர் என்கை ஈன்ருேட்கு அழகு.
28. சிவத்தைப் பேணிற் றவத்திற்கு அழகு.
29. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
30. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்.
31. சூதும் வாதும் வேதனை செய்யும்.
32. செய்தவம் மறந்தாற் கைதவம் ஆளும்.
33. சேமம் புகினும் யாமத்து உறங்கு.
34. சையொத்து இருந்தால் ஐயம் இட்டுண்.
35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்,
36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.

பொருள்

26. தன் சந்ததி பெருகுதற்கு அழகாவது இல்லறம் செய்தல்.

27. தன் பிள்ளைகள் நற்குண நற்செயல்கள் உள்ளவர்களென்று கற்ருேர் சொல்வது, பெற்றவளுக்கு அழகாகும்.

28. ஒருவன் சிவபெருமானை வழிபடுதல், அவனது தவத்திற்கு அழகாகும்.

29. நீ சிறந்த வாழ்வைத் தேட விரும்பினால், பயிரிடுந் தொழிலைத் தேடிக்கொள்.

30. உறவினருக்கு அழகாவது ஒருவருக்கு மற்றவர் துணையாகச் சமீபத்திலே குடியிருத்தலாகும்.

31. சூதாடுதலும், தருக்கம் பேசுதலும் துன்பத்தை உண்டாக்கும்.

32. ஒருவன் தான் செய்யவேண்டிய தவத்தை (-நற்கருமத்தை) மறந்தால், அவனை அறியாமை அடிமைகொள்ளும்.

33. காவல் செய்யப் போயிருந்தாலும், சாமத்துக்குப்பின் நித்திரை செய்.

34. உன்னிடம் பொருள் (ஒத்து) இருந்தால் பிச்சை இட்டு, நீயும் உண்.

35. பொன் உடையவர்கள் அறஞ்செய்து இன்பம் பெறுவர்.

36. சோம்பல் உடையவர்கள் வறுமையினால் வருந்தி இரந்து திரிவர்.

பயிற்சி

1. இப்பகுதிப் பாடல்களை மனனஞ் செய்க

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

சீரைத் தேடின் ——— கேடு
——— வாதும் வேதனை செய்யும்
சுற்றத்திற்கு ——— சூழ இருத்தல்
சேமம் புகினும் யாமத்து ———.

பாடம் : 14

# திருநாவுக்கரசு நாயனரை நீற்றறையில் இட்டமை


திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் வாழ்ந்த காலத்திலே திருநாவுக்கரசு நாயனர் என்பவரும் வாழ்ந்தார். அவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரிலும் வயதிற் கூடியவர். அதனல், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திருநாவுக்கரசரை "அப்பர்" என அழைத்தார். அதனல் அவருக்கு அப்பர் எனப் பெயர் உண்டாயிற்று.

அப்பர் திருவாமூர் என்னும் இடத்திலே பிறந்தவர். பிறந்தபோது அவருடைய பெற்றோர் அவருக்கு மருணீக்கியார் எனப் பெயரிட்டார்கள். அவர் சிறுவராயிருக்கும் போதே அவருடைய பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள். அதனல் அவரை அவரது தமக்கையார் வளர்த்து வந்தார். திலகவதியார் என்பது தமக்கையாரின் பெயர். அவர் சிவபெருமானிடத்திலே மிகுந்த பக்தி உள்ளவர்.

சில காலம் செல்ல மருணீக்கியார் சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்திலே சேர்ந்தார். சமண நூல்களை நன்றுகப் படித்தார். பின்னர் சமண சமயக் குரு ஆனர். அப்பொழுது அவருக்குத் தருமசேனர் என்பது பெயர்.

தம்பியார் சமண சமயத்தைச் சேர்ந்தமையால், திலகவதியார் மனம் வருந்தினார். தம்பியை மறுபடியும் சைவ சமயத்திலே சேர்க்க விரும்பினார். திருவதிகையிலுள்ள சிவபெருமானை வணங்கித் தமது விருப்பத்தைக் கூறினார். அவரது விருப்பம் நிறைவேறும் நாள் வந்தது.

சமணருடன் வாழ்ந்த தருமசேனருக்குச் சூலைநோய் உண்டானது. அது மிகவும் பொல்லாத நோய். அந்த நோய் அவரை மிகவும் வருத்தியது. சமணர்களால் அதை நீக்க முடியவில்லை.



திலகவதி அம்மையாரும் சூலை நோயுற்றிருந்த அப்பர் சுவாமிகளும்:

நோயின் கொடுமை தாங்க மாட்டாத தருமசேனர் ஒருவருக்கும் தெரியாமல் தமக் கையாரிடம் வந்தார். தமது துன்பத்தைக் கூறி னார். திலகவதியார் அவரைத் திருவதிகை யிலுள்ள சுவாமியிடம் அழைத்துச் சென்றார். சுவாமியை வணங்குமாறு கூறினார். அவ ருடைய நோய் நீங்கிற்று.

தருமசேனர் மனம் மகிழ்ந்தார். தமக்கை யாருக்கும் மகிழ்ச்சி உண்டானது. தமது நோயை நீக்கிய சுவாமியை, தருமசேனர் பாடல்கள் பாடி வணங்கினார். அவருடைய பாடல்கள் அருமையான தேவாரங்களாயிருந் தன. அதனால் அவருக்கு நாவுக்கரசர் என் னும் பெயரும் உண்டானது.

தருமசேனர் சைவ சமயத்தைச் சேர்ந் தமையைச்சமணர்கள் அறிந்தார்கள். அதனால் அவர்மேற் கோபங் கொண்டார்கள். அந்த நாட்டு அரசனிடம் கோள்மூட்டினார்கள். அரச னும் சமண சமயத்தவன் ஆனபடியால் சம ணர் சொன்னவற்றை நம்பினான். திருநாவுக் கரசரை அழைத்துத் தண்டிக்க எண்ணினான். திருநாவுக்கரசரை அழைத்தான். சமணர் சொற்படி சுண்ணும்பு அறையில் அடைத்தான்.

சுண்ணும்பு அறை மிகவும் வெப்பமாய் இருக்கும். அதற்குள் அகப்பட்டவர்கள் வெப்பம் தாங்கமாட்டாமல் அவிந்து விடுவார்கள். ஆனால், திருநாவுக்கரசரை அந்த வெப்பம் அவிக்கவில்லை. அவர் அந்தச் சுண்ணும்பு அறையிலே இருந்து சிவபெருமானையே நினைந்து வணங்கினர். "மாசில் வீணையும்..." என்று தொடங்கித் தேவாரங்கள் பாடியருளினர். அதனால், அவர் சுகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தார். அவர் சுகமாக இருப்பதைக் கண்ட சமணர்கள் ஆச்சரியமும் துக்கமும் அடைந்தார்கள்.

### பயிற்சி

விட்ட இடங்களை நிரப்பி வாசிக்க :

மருணீக்கியாரை அவரது——வளர்த்து வந்தார். அவர் சில காலத்தால்—— சமயத்தைச் சேர்ந்தார். சமண சமயக்குரு ஆனார். அப்பொழுது அவருக்கு —— என்று பெயர். பின் —— நோய் உண்டானபடியால் —— ரிடம் வந்தார். —— உள்ள சுவாமியை வணங்கினர். சூலை நோய்——; பின்னர் —— அவர்மீது கோபம் கொண்டார்கள். சமணர் சொற்படி —— நாவுக்கரசரை —— அடைத்தான். அவர் சிவபெருமானை வணங்கி —— என்னும் தேவாரத்தைப் பாடியருளினர்.

(சமண; தமக்கையார்; சூலை; சமணர்; அரசன்; கடலிலே; தருமசேனர்; திருவதிகையில்; மாசில் வீணையும்; நீங்கிற்று)

## பாடம்: 15

# அப்பர் தேவாரம்

## பொது

அப்பர் சுவாமிகள் சுண்ணும்பு அறையிலே அடைக்கப்பெற்றமையை முந்திய பாடத்திற் படித்தோம். அவர் சுண்ணும்பு அறையிலே பாடிய தேவாரம் கீழே இருக்கிறது.

*ஐந்தாம் திருமுறை* *தனித் திருக்குறுந்தொகை*

*திருச்சிற்றம்பலம்*

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— மதியம்-சந்திரன்; பொய்கை-குளம்; எந்தை-எம்முடைய தந்தை.

பொருள் :— சிவபெருமானுடைய திருவடி நிழல் வீணையின் ஓசையைப் போல இனிமையாய் இருந்தது. மாலைக் காலத்துச் சந்திரனைப் போலக் குளிர்மையாய் இருந்தது. தென்றற் காற்றைப்

போலச் சுகத்தைக் கொடுத்தது. இளவேனிற் காலம் போலவும், வண்டுகள் மொய்க்கின்ற வாவி போலவும் குளிர்மையாய் இருந்தது.

பயிற்சி

1. தேவாரத்தை மனனஞ்செய்து பண்ணோடு பாடுக.

2 கோடிட்ட இடங்களை நிரப்புக :

மாசில் வீணையும் மாலை ———
வீசு ——— வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை ——— போன்றதே
——— எந்தை இணையடி நீழலே.

பாடம் : 16

# கொன்றை வேந்தன் (ஈ)

37. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
38. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
40. தீராக் கோபம் போரா முடியும்.
41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.
43. தெய்வஞ் சீறிற் கைதவம் மாளும்.
44. தேடாது அழிக்கிற் பாடா முடியும்.
45. தையும் மாசியும் வையகத்து உறங்கு.
46. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
47. தோழ னோடும் ஏழைமை பேசேல்.

பொருள்

37. பிதாவினுடைய சொல்லுக்கு மேற்பட்ட சொல் இல்லை.

38. தாயைப் பார்க்கிலும் சிறப்புப் பொருந்திய ஒரு கோவிலும் இல்லை.

39. நீ, அலைகள் உள்ள கடலைக் கடந்து போயானாலும் திரவியத்தைச் சம்பாதி.

40. நீங்காத கோபமானது பின்பு சண்டையாக முடிந்துவிடும்.

41. தமது கணவருக்குத் துன்பம் வந்தபோது மனம் பதையாத பெண்கள், அவரது வயிற்றுக்குள் நெருப்புப் போன்றவர்களாவர்.

42. தமது கணவர்மேல் குற்றஞ்சொல்லித் தூற்றுகிற பெண்களை, அவருக்கு இயமனனவர்கள் என்று எண்ணத் தகும்.

43. தெய்வமானது கோபித்தால், ஒருவனுக்குக் கைகூடியிருந்த தவமும் பயன்படாமல் அழியும்.

44. ஒருவன் வருந்திச் சம்பாதியாமல், இருக்கிற பொருளைச் செலவழித்தால் அவனுக்குப் பின் வருத்தமாக முடியும்.

45. நீ, தை மாதத்திலும் மாசி மாதத்திலும் வைக்கோல் வீட்டிலே நித்திரைபண்ணு.

46. ஒருவருக்குச் சேவைசெய்து உண்ணும் உணவினது சுவையைப் பார்க்கிலும், உழுது பயிர் செய்து உண்ணும் உணவின் சுவை இன்பந் தருவதாகும்

47. நீ உன் சிநேகனேடாயினும் உனக்கு இருக்கிற சிறுமையைப் பேசாதே.

பயிற்சி

1. பாடல்களை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக:

தந்தை சொல் மிக்க ——— இல்லை.
தாயிற் சிறந்தொரு ——— இல்லை.
தீராக் ——— போரா முடியும்.
——— மாசியும் வையகத்து உறங்கு.

பாடம்: 17

# சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்தருளியமை

மதுரைக்குப் பக்கத்திலே வைகை என்னும் ஆறு பாய்கிறது. அது ஒரு முறை பெருக்கெடுத்தது. பெருகியவெள்ளம் ஊருக்குள்ளே புகுந்தது. ஆடு, மாடுகளையும் பொருள்,பண்டங்களையும் அள்ளிக் கொண்டுபோனது. சனங்கள் எல்லாரும் அல்லோல கல்லோலப்பட்டார்கள். அரசனிடம் முறையிட்டார்கள்.

அரசன் ஆற்றின் கரையை உயர்த்தும்படி கட்டளையிட்டான். ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டினருக்கும் ஒவ்வொரு பங்கு அளந்துவிடப் பட்டது. சனங்கள் எல்லோரும் கூடையும் மண் வெட்டியும் கொண்டு போனார்கள். மண்ணை வெட்டினார்கள். வைகைக் கரையிலே மண்ணைக் கொட்டிக் கரையை உயர்த்தினார்கள்.

மதுரையிலே செம்மனச்செல்வி என்னும் ஓர் அம்மையாரும் இருந்தார். அவர் வயது சென்ற ஒரு கிழவி. மிகவும் வறியவர். அவருக்கு உறவினர் ஒருவரும் இல்லை. ஒரு குடிசையில் அவர் தனியே வாழ்ந்து வந்தார். பிட்டு

அவித்து அதனை விற்றுச் சீவியம் செய்தார். ஆனாலும் சிவபெருமானிடத்திலும் மிகுந்த பக்தி உள்ளவர். தினமும் கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குபவர். அவரும் வைகையாற்றின் ஒரு பகுதியைக் கட்ட வேண்டியிருந்தது.

அந்தக் கிழவியால் அணைகட்ட முடியுமா? ஆனாலும் அரசனது கட்டளையை மீறமுடியுமா? என்ன செய்வார், பாவம்!

வீட்டை விட்டு வெளியே புறப்பட்டார். கோலையூன்றிக்கொண்டு தள்ளாடித்தள்ளாடி நடந்தார். யாராவது கூலிக்காரர் அகப்படுவார்களா எனப் பார்த்தார். ஒருவரும் அகப்பட வில்லை. என்னசெய்யலாமென எண்ணினார். 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை'. மதுரையிலே உள்ள சொக்கநாதர் கோவிலுக்குச் சென்றார்.

"சுவாமி, ஏழையாகிய எனக்கு உதவி செய்வார் ஒருவரும் இல்லை. நீரே எனக்குத் துணை. நீர் உதவி செய்யாவிட்டால் என் துன்பத்தை வேறு யார் நீக்குவார்?" என்று முறையிட்டு அழுதார். அந்த அழுகை வீண் போகவில்லை.



சிவபெருமான் கூலியாளராக வந்து
பிட்டுக்கு மண் சுமத்தல்.

சிவபெருமான் ஒரு கூலியாளரானுர். கந்தைத் துணியுடுத்துக் கூடையுடனும் மண் வெட்டியுடனும் வந்தார். அம்மையாரின் முன்னே தோன்றினுர். "யாருக்காவது கூலியாள் வேண்டுமா?" என்று கூறிக்கொண்டே சென்றுர். அம்மையாரின் மனம் மகிழ்ந்தது. சிவபெருமானுடைய கிருபையைப் போற்றினுர். கூலியாளரிடம் தன் பங்கைக் கட்டித் தரும்படி கேட்டார்.

கூலியாளர் "எனக்குப் பசிக்கிறது" என்று கூறினுர். செம்மனச் செல்வியார் கூலியாளரைத் தமது குடிசைக்குக் கூட்டிச் சென்றுர். அங்கே தாம் அவித்த பிட்டைக் கொடுத்தார். அப்பொழுது கூலியாளர், "தாயே, உன் பிட்டு மிகவும் நன்று, நன்று" என்று சொல்லிப் பிட்டை உண்டார். பின்னர் செம்மனச் செல்வியாரின் பங்கைக் கட்டச் சென்றுர்.

கூலியாளர் வைகைக் கரையை அடைந்தார். அவர் ஒரு கூடை மண்ணைக் கொண்டு போய்க் கரையிலே கொட்டுவார். களைத்தவர் போலக் கொன்றை மர நிழலிலே கண் வளர்வார். கந்தைத் துணியிலே தாம் கட்டிவந்த பிட்டை உண்பார். வேலையை மேற்பார்வை செய்பவர்கள் கூலியாளின்

விளையாட்டைப் பார்த்தனர். அரசனுக்கு அறிவித்தனர். அரசன் கூலியாளருக்கு அடிக்கும்படி கட்டளையிட்டான். ஒரு ஏவலாளன் கைச் சவுக்கால் கூலியாளுக்கு வலப் பாகத்தில் அடித்தான். அந்த அடி எல்லா உயிர்களின் உடம்பிலும் பட்டது. உலகம் திடுக்கிட்டது. கூலியாள் மதுரைச் சொக்கநாதரே என அறிந்து யாவரும் மண் சுமந்த பெருமானையும் அவரை மண் சுமக்கச் செய்த செம்மனச் செல்வி அம்மையாரையும் துதித்தனர்.

## பயிற்சி

1. செம்மனச் செல்வியார் எங்கே வசித்தார் ?

2. கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களை வைத்து வாசிக்க.

   (அ) செம்மனச் செல்வியார் மதுரையிலுள்ள ——— நாதர் கோவிலுக்குச் சென்றார்.

   (ஆ) சிவபெருமான்——வடிவங் கொண்டு செம்மனச் செல்வியார் முன் தோன்றினார்.

   (இ) கூலியாளர், "எனக்குப்——" என்று கூறினார்.

   (ஈ) "தாயே, உனது பிட்டு மிகவும்———" என்று சொல்லிப் பிட்டை உண்டார்.



ஏவலாளன் கூலியாளருக்கு அடித்தல்

பாடம் : 18

# திருவாசகம்

வைகையாற்றுக்குச் சிவபெருமான் அணை கட்டிய கதையை முந்திய பாடத்திற் படித்தோம். அந்த வைகையாறு பெருகியதற்கு அந்த நாட்டு அரசனே குற்றவாளி. அவன் பாண்டிய அரசன். அவனுடைய முதன் மந்திரியார் மாணிக்கவாசக சுவாமிகள். இவர் சமய குரவர் நால்வரில் ஒருவர் என்று முன்னே படித்தோம் அல்லவா ?

ஒரு முறை பாண்டிய அரசன் மாணிக்கவாசகரைத் துன்பப்படுத்தினன். அதனுலேயே வைகை நதி பெருகிற்று. பின்னர் பாண்டியன் தன் பிழையை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டான். அதன் பின் வைகையின் பெருக்குத் தணிந்தது.

சைவ சமய குரவராகிய மாணிக்கவாசக சுவாமிகளாற் பாடப்பட்ட தோத்திரங்கள் திருவாசகம் எனப்படும். அவற்றுள் ஒன்று கீழே இருக்கிறது.

*எட்டாம் திருமுறை*

*திருச்சிற்றம்பலம்*

பூசுவதும் வெண்ணீறு
        பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்
        மறைபோலும் காணேடி

பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானுன் சாழலோ.

திருச்சிற்றம்பலம்

பொருள்:— இறைவன் பூசிக்கொள்வது வெண்ணீருகும். ஆபரணமாக அணிவது பாம்பாகும். பேசுவது வேதமாகும். இவ்வாறு பூசுவதும் அணிவதும் செய்வதால் எல்லா உயிர்களுக்குமுள்ள வடிவையே தாமும் வடிவாகக் கொண்டுள்ளான்.

பயிற்சி

1. பாடலை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

பூசுவதும் ———
பூண்பதுவும் ———
——— திருவாயால்
மறைபோலும் ———
பூசுவதும் ———
——— கொண்டென்னை
ஈசனவன் ———
இயல்பானுன் ———.

பாடம் : 19

# திருக்கோவிலிலே செய்யும் திருத்தொண்டுகள்

கடவுள் நமக்கு உடம்பைத் தந்தது தம்மை வழிபடுவதற்காகவே, என்று முன்பு படித்திருக்கிறோம். ஆதலால், நாம் திருக் கோவிலிற் போய், அங்கே எங்கள் உடம்பி னாலே இயன்ற அளவு தொண்டுகள் செய்து, அவரை வழிபடுவது மிகவும் அவசியமாகும்.

சிவபெருமான் எங்கும் உள்ளவராயினும் அவர், திருக்கோவிலிலே எங்களுக்கு அருள் செய்வதற்காக எழுந்தருளியிருப்பர். அதனால், திருக்கோவிலிற் செய்யும் தொண்டுகள், சிவ பெருமானுக்குச் செய்யும் திருத்தொண்டு களாகும்.

திருக்கோவிலிலே நாங்கள் செய்யத்தக்க திருத்தொண்டுகள் பல. அவை : திருவலகிடு தல், திருமெழுக்கிடுதல், திருநந்தவனம் வைத்

தல், பத்திர புஷ்பம் எடுத்தல், தோத்திரம் பாடுதல், திருவிளக்கு ஏற்றுதல் முதலியன வாம்.

## திருவிளக்கு ஏற்றுதல்

திருவிளக்கு ஏற்றும் திருத்தொண்டு எல்லாத் திருத்தொண்டுகளிலும் சிறந்தது. திருவிளக்கு ஏற்றுவதற்குப் பசுநெய், எருமை நெய், எண்ணெய், தேங்காய் நெய், இருப்பை நெய் என்பவற்றை உபயோகிக்கலாம். இவற்றுட் பசுநெய்யே சிறந்தது. திருவிளக்குத் திரி பருத்தி நூலிலே செய்யப்படுதல் வேண்டும். உடுத்த பழந் துணிகளாற் செய்யப்படுதல் ஆகாது.

சிவபெருமானிடத்திலே பக்தி உடையவர்களாய், திருவிளக்கு ஏற்றுபவர்களும் திருவிளக்கு ஏற்றுவதற்கு நெய் முதலியன கொடுப்பவர்களும் பாவம் நீங்கி இன்பம் அடைவார்கள். நமிநந்தி அடிகள் என்பவர், திருவிளக்கு ஏற்றுந் திருத்தொண்டு செய்து, சிவபெருமானை அடைந்து, பேரின்பம் பெற்றுர். அவரைப்பற்றி அடுத்த பாடத்திலே படிப்போம்.

## பயிற்சி

1. திருத்தொண்டுகள் சில கூறுக.
2. திருவிளக்கு ஏற்றுவதற்கு உபயோகமாகும் நெய்கள் எவை?
3. திருவிளக்குத் திரி எதனுற் செய்யப்படுதல் வேண்டும்?
4. திருவிளக்கு ஏற்றும் திருத்தொண்டு செய்த அடியார் ஒருவரின் பெயர் கூறுக.
5. கோடிட்ட இடங்களை நிரப்புக:

(அ) கடவுள் தம்மை வழிபடுவதற்காகவே ——— தந்தருளினர்

(ஆ) திருவிளக்கு ஏற்றுவதற்குப் ———. நெய்யே ——— சிறந்ததாகும்.

பாடம் : 20

# நமிநந்தி அடிகள்

சோழ நாட்டிலே ஏமப்பேறூர் என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கே நமிநந்தி அடிகள் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமானிடத்திலே மிகுந்த பக்தி உள்ளவர்; தினந்தோறும் திருவாரூர்க் கோவிலிற் போய், இறைவனை வணங்கி வருபவர்.

திருவாரூருக்கு அயலிலே அறநெறி என்னும் திருக்கோவில் உண்டு. நமிநந்தி அடிகள் அத்திருக்கோவிலிலும் போய் வணங்கி வந்தார்; திருத்தொண்டுகளும் செய்தார்.

அவர் ஒருநாள், அக்கோவிலிலே திருவிளக்கு ஏற்றும் திருத்தொண்டு செய்ய விரும்பினர். அன்று, பகற்பொழுது கழிந்து மாலைக் காலம் வந்தது. திருவிளக்கு ஏற்றுவதற்கு அவரிடம் நெய் இல்லை. அதனல், அவர் அருகே இருந்த ஒரு வீட்டிற் சென்று, ''திருவிளக்கு ஏற்ற நெய் வேண்டும்'' என்று கேட்டார்.

அந்த வீட்டிலே இருந்தவர்கள் சமணர்கள்; சைவ சமயத்தவர்களிடம் வெறுப்புக் கொண்டவர்கள். அதனுல், அவர்கள் நமிநந்தி அடிகளைப் பார்த்து, "இங்கு நெய் இல்லை; தண்ணீரை வார்த்து விளக்கை ஏற்றும்" என்ருர்கள்.

அதைக்கேட்ட நமிநந்தி அடிகள்மனம் வருந்தினுர்; திருக்கோவிலிற்சென்று, மனம் உருகிக் கண்ணீர் சொரியச் சுவாமியை வணங்கினுர். அப்போது, "நமிநந்தியே, உன் மனக் கவலையை விடு; அருகிலுள்ள குளத்து நீரை ஊற்றி, விளக்கை எரி" என்று ஆகாயத்திலே ஒரு வாக்கு எழுந்தது.

நமிநந்தி அடிகள் அவ்வார்த்தைகளைக் கேட்டு, மகிழ்ச்சி அடைந்தார்; திருக்குளத்திற் சென்று, நீரை மொண்டுவந்து திருவிளக்கு ஏற்றினுர். அது சுடர்விட்டுப் பிரகாசித்து எரிந்தது.

நமிநந்தி அடிகள் பேரன்போடு தொண்டு செய்தமையினுலேயே, கடவுளின் அருளால், தண்ணீர் நெய்போல எரிந்தது. யாவரும்

இந்த அற்புதத்தைக்கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள்; சமணர்கள் வெட்கித் தலைகுனிந்தார்கள்.

நமிநந்தி அடிகள், நாள்தோறும் இத்திருத்தொண்டு செய்து சிவபதம் அடைந்தார்.

பயிற்சி

1. நமிநந்தி அடிகள் திருவிளக்கு ஏற்றும் திருத்தொண்டை எந்தக் கோவிலிற் செய்தார்?
2. "தண்ணீரை வார்த்து விளக்கை எரியும்" என்று கூறியவர்கள் யாவர்?
3. "குளத்து நீரை ஊற்றி விளக்கை எரி" என்று கூறியருளியவர் யார்?
4. கோடிட்ட இடங்களை நிரப்புக:

(அ) நமிநந்தி அடிகள் ——— என்னும் ஊரில் வாழ்ந்தார்.

(ஆ) திருவாரூருக்கு அயலிலே ——— என்னும் திருக்கோவில் உண்டு.

பாடம் : 21

# கொன்றை வேந்தன் (உ)

48. நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.
49. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
50, நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.
51. நீரகம் பொருந்திய ஊரகத்து இரு.
52, நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
53. நூன்முறை தெரிந்து சீலத்து ஒழுகு.
54. நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை.
55. நேரா நோன்பு சீரா காது.
56. நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
57. நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்
58. நோன்பு என்பதுவே கொன்று தின்னமை.

பொருள்

48. **நல்ல சகவாசம் அல்லாதது துன்பத்தை உண்டாக்கும்.**

49. **தேசமெங்கும் செழித்திருக்குமானல், திருட்டு முதலிய கேடுகள் இல்லையாம்.**

50. **ஒருவர் தன்னிடம் நிற்கும்படி கற்றலாவது, அவர் சொல்லும் சொற்கள் ஒருபோதும் தவருமையாம்.**

51. **நீர்வளத்தைத் தன்னிடத்தே உடைய ஊரில், நீ குடியிரு.**

52. சிறிய தொழிலையும் ஆலோசித்துச் செய்.

53. நீ தரும நூலிலே சொல்லப்பட்ட முறையை அறிந்து, நல்லொழுக்க வழியிலே நட.

54. ஒருவரது மனசுக்கு மறைக்கப்பட்ட யாதொரு வஞ்சனையும் இல்லை.

55. மனசினால் விரும்பாத விரதம் சிறப்புடையதாக முடியாது.

56. கேட்பவர் எதிர்வார்த்தை பேசாமல் வருந்துபவரானாலும், அற்பவார்த்தைகளை நீ சொல்லாதே.

57, உருவத்தினாலே சிறியவர் என்று இகழப்படுபவரும், தாம் செய்யும் காரியத்தால் யாவரும் விரும்பும் குணம் உடையவராவர்

58. ஓர் உயிரைப் போக்கி அதன் உடம்பைத் தின்னாமையே விரதமாம்.

பயிற்சி

1. பாடல்களை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

——— பொருந்திய ஊரகத்து இரு.
நுண்ணிய ——— எண்ணித் துணி.
நோன்பு என்பதுவே கொன்று ———.
நூன்முறை தெரிந்து ——— ஒழுகு.

# மூன்றும் பருவம்

பாடம்: 22

# புண்ணியங்கள், பாவங்கள்

(சைவ வினாவிடை முதற் புத்தகம்
புண்ணிய பாவ இயல்)

1. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருளிச் செய்த முதனூல்கள் எவை?

வேதம் சிவாகமம் என்னும் இரண்டுமாம்.

2. வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவைகள் எவைகள்?

புண்ணியங்கள்.

3. புண்ணியங்களாவன யாவை?

கடவுளை வழிபடுதல், தாய் தகப்பன் உபாத்தியாயர் குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றியறிதல் முதலானவைகள்.

4 புண்ணியங்களைச் செய்தவர் எதனை அநுபவிப்பர்?

மேல் உலகங்களாகிய புண்ணிய லோகங்களிலே போய் இன்பத்தை அநுபவிப்பர்.

5. வேத சிவாகமங்களிலே விலக்கப்பட்டவைகள் எவைகள்?

பாவங்கள்.

6. பாவங்களாவன யாவை?

கொலை, களவு, கள்ளுக்குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், சூதாடுதல் முதலானவைகள்.

7. பாவங்களைச் செய்தவர் எதனை அநுபவிப்பர்?

நரகங்களிலே விழுந்து, துன்பத்தை அநுபவிப்பர்.

## பயிற்சி

1. வினா விடைகளை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருளிச் செய்த முதனூல்கள் வேதம் ——— என்னும் இரண்டுமாம்.

(ஆ) சிவாகமங்களிலே ——— புண்ணியங்கள்; விலக்கப்பட்டவைகள் ———.

(இ) பாவங்களைச் செய்தவர் ——— விழுந்து துன்பத்தை அநுபவிப்பர்.

பாடம்: 23

## சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம் பாடியருளியமை

இந்தியாவிலே திருநாவலூர் என்னும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரிலே சடையனர் என்னும் பிராமணர் வாழ்ந்தார். அவரது மனைவியார் பெயர் இசைஞானியார். இவர்களுக்கு மகனாகச் சுந்தரர் அவதாரஞ் செய்தார்.

சுந்தரர் சிறு குழந்தையாய் இருக்கும் போது, நரசிங்கமுனையர் என்னும் அரசர் அவரைக் கண்டார். அவரிடத்திலே அன்பு கொண்டார். பெற்றோரிடம் போய், சுந்தரரைத் தாம் வளர்ப்பதற்குத் தரும்படி கேட்டார். பெற்றோரும் அதற்கு உடன்பட்டு அவரைக் கொடுத்தார்கள்.

நரசிங்கமுனையர் தம் பிள்ளையைப்போற் சுந்தரரை வளர்த்து வந்தார். சுந்தரர் வளர்ந்து விவாகம் செய்யும் வயதை அடைந்தார். பெரியோர்கள், சடங்கவி சிவாசாரியார் என்பவரின் மகளை அவருக்கு விவாகஞ் செய்ய நிச்சயித்தார்கள்,



விவாக நாளிலே, சுந்தரர் மணவாளக்கோலத்தோடு போய், மணப்பந்தரில் இருந்தார். அப்போது கிழப் பிராமணர் ஒருவர் அவர்முன் வந்து நின்று, "நீ என்னுடைய அடிமை; என்னுடைய வேலைகளை நீ செய்தல் வேண்டும்; ஆதலால், எழுந்து என்னுடன் வா" என்ருர். சுந்தரருக்குப் பெருங் கோபம் உண்டாயிற்று. அவர் கிழப் பிராமணரைப் பார்த்து, "நீர் யார்? பித்தனைப்போலப் பிதற்றுகிறீரே; நான் உமக்கு அடிமை அல்லேன்" என்ருர்.

கிழப்பிராமணர், தம்மிடம் இருந்த ஓர் ஓலையை எடுத்துக்காட்டினுர்; "இந்த ஓலையில் உன்னை எனக்கு அடிமை என்று எழுதப்பட்டிருக்கிறது; இதை உன் பாட்டனுர் எனக்கு எழுதித் தந்தார்" என்று கூறினுர்.

அதைக்கேட்ட சுந்தரருக்கு மேலும் அதிக கோபம் வந்தது. அவர் கிழவரிடம் இருந்த ஓலையைப் பறித்துக் கிழித்து எறிந்தார்.

“இந்த ஓலையை நீ கிழித்து எறிந்து விட்டாலும் இன்னும் ஓர் ஓலை என்னிடம் இருக்கிறது. அந்த ஓலையே மூல ஓலை. அதைப் பெரியோர்களுக்குக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதை மெய்ப்பிப்பேன்; என்னுடன் வா” என்று சொல்லி, சுந்தரரையும் கூட்டிக்கொண்டு திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழப் பிராமணர் போனார்.

அவர் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பெரியோர்களிடம் மூலஓலையைக் காட்டினார். அவர்கள் அந்த ஓலையில் உள்ள கையெழுத்தைச், சுந்தரரின் பாட்டனார் எழுதிய கையெழுத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். அவை ஒத்தனவாய் இருந்தன. அதனால், அவ்வோலையில் எழுதியபடி, “சுந்தரர் கிழப்பிராமணருக்கு அடிமையே” என்றார்கள்.

கிழப் பிராமணர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தமக்கு அடிமையான சுந்தரரைக் கூட்டிக்கொண்டு திருவெண்ணெய்நல்லூர்க் கோவிலுக்குப் போனார். “இதுதான் என்னுடைய வீடு” என்று சொல்லி, உள்ளே போய் மறைந்தருளினார்.

அதைக்கண்ட சுந்தரர் பேராச்சரியம் அடைந்தார்; தம்மை அடிமையாக்கிக் கொண்டவர் சிவபெருமானே என்று அறிந்து மகிழ்ந்தார். அப்போது, சிவபெருமான் அவருக்குக் காட்சிகொடுத்து, "சுந்தரா, நீ என்னைப் பித்தன் என்ருய்; பித்தன் என்று தொடங்கி என்னைப் பாடு" என்று கூறியருளினுர். சுந்தரமூர்த்தி நாயனுர், சிவபெருமானை வணங்கி, "பித்தா பிறை சூடி...." என்று தேவாரம் பாடியருளினுர்.

## பயிற்சி

1. சுந்தரரை வளர்த்த அரசர் யார்?
2. "நீ என்னுடைய அடிமை" என்று சுந்தரருக்கு யார் கூறினுர்?
3. கிழப் பிராமணராய் வந்தவர் யர்ர்?
4. கிழப் பிராமணர் சுந்தரரை எங்கே கூட்டிச் சென்ருர்?
5. கோடிட்ட இடங்களை நிரப்புக:

   (அ) சுந்தரமூர்த்தி நாயனுரின் தந்தையார் பெயர் ———.

   (ஆ) சுந்தரமூர்த்தி நாயனுர் ——— என்ற தேவாரத்தைப் பாடியருளினுர்.

பாடம் : 24

# சுந்தரர் தேவாரம்

## திருவெண்ணெய் நல்லூர்

"பித்தா என்று தொடங்கி என்னைப்பாடு" என்று சிவபெருமான் கூறியருளியபோது, சுந்தரமூர்த்தி நாயனர் பாடியருளிய தேவாரம், கீழே இருக்கின்றது.

*ஏழாம் திருமுறை* *பண் : இந்தளம்*

*திருச்சிற்றம்பலம்*

பித்தா பிறை சூடீபெரு மானே அரு ளாளா
எத்தன் மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்
[லூர்அருட் டுறையுள்
அத்தா உனக் காளாயினி அல்லேன்என லாமே.

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— பிறை சந்திரன். சூடீ-சூடியவரே. வெண்ணெய் நல்லூர் – திருவெண்ணெய் நல்லூர். அருட்டுறை : கோயிலின் திருப்பெயர். அத்தா - தந்தையே. ஆளாய் - அடிமையாய்.

பொருள் :— பித்தரே, சந்திரனைச் சூடியவரே, எங்கள் பெருமானே, அருள் உடையவரே, திருவெண்ணை நல்லூரில் எழுந்தருளி இருக்கும் தந்தையே, நான் உம்மை ஒருபோதும் மறவேன்;

எப்போதும் நினைக்கின்றேன். நீரும் என் மனத்திலே எப்போதும் இருக்கின்றீர். நான் உமக்கு அடிமையாகிவிட்டேன். இனி ஒருபோதும் "நான் அடிமை அல்லன்'' என்று சொல்லமாட்டேன்.

பயிற்சி

1. தேவாரத்தை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக :

பித்தா பிறை ——பெருமானே அருளாளா
——மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்
ணெய் ——அருட்டுறையுள்
அத்தா உனக் காளாயினி ——என லாமே.

பாடம் : 25

# கொன்றை வேந்தன் (ஊ)

59. பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்.

60. பாலோடு ஆயினும் காலம் அறிந்துண்.

61. பிறன்மனை புகாமை அறமெனத் தகும்.

62. பீரம் பேணி பாரந் தாங்கும்.

63. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.

64. பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்.

65. பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்.

66. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்,

67. பையச் சென்றால் வையந் தாங்கும்.

68. பொல்லாங்கு என்பவை எல்லாந் தவிர்.

69. போனகம் என்பது தான்உழந்து உண்டல்.

பொருள்

59. ஒருவன் செய்த பயிரின் விளைவினாலும் விளைவு இல்லாமையாலும், அவனிடத்தே புண்ணியம் இருத்தலும் இல்லாமையும் தெரியும்.

60. நீ, பாலோடு சேர்ந்த சோற்றை உண்டாலும், உண்ணத்தக்க காலத்தை அறிந்து உண்பாயாக.

62. தாய்ப்பாலை நிறைய உண்டு வளர்ந்தவர் பாரமான சுமையைத் தாங்க வல்லவராவர்.

63. நீ, புலால் உண்ணுதலையும், கொலைசெய்தலையும், களவு எடுத்தலையும் ஒழித்துவிடு.

64. இழிந்த மக்களுக்கு நல்லொழுக்கம் இல்லை.

65. உண்மையான அறிவு உள்ளவர்களுக்கு, இனத்தவர்மேல் அன்பும் பிறர்மேல் வெறுப்பும் இல்லை.

67. ஒருவர் நல்லவழியில் அமைதியாக வாழ்ந்தால், பூமியில் உள்ளவர்கள் அவரை மேலானவராகக் கொள்வர்.

68. நீ, தீங்குகள் எல்லாவற்றையும் செய்யாமல் ஒழித்துவிடு.

69. ஒருவர், தாம் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து உண்ணுதலே, போசனம் என்று சொல்லப்படும்.

## பயிற்சி

1. பாடல்களை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக :

பூரியோர்க்கு இல்லை சீரிய ———.
பண்ணிய பயிரிற் ——— தெரியும்.
——— கொலையுங் களவுந் தவிர்.
போனகம் என்பது தான்உழந்து உண்டல்.

பாடம் : 26

# செங்கட்டிகள் பொன் கட்டிகளானமை

சுந்தரமூர்த்திநாயனர், "பித்தா பிறை சூடீ" என்னும் தேவாரம் பாடியருளிய மையை முன்பு ஒரு பாடத்திலே படித்தோம். இந்தப் பாடத்திலே, அவர் செங்கட்டிகளைப் பொன் கட்டிகளாகப் பெற்றுக்கொண்டமை யைப் படிப்போம்.

சுந்தரமூர்த்திநாயனர் சிவபெருமானுக்கு அடியவர் ஆனபின்பு, பரவையார் என்பவரை விவாகஞ் செய்தார். பரவையார் திருவாரூரிலே வாழ்ந்தவர். அவர், திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனிடம் மிகுந்த பக்தி உள்ளவர். அதனுல், திருக்கோயில் வழிபாட்டுக்கும் சிவனடியார்களுக்கும் தமது செல்வத்தைச் செலவு செய்துவந்தார்.

ஒருமுறை பங்குனி உத்தரத் திருநாள் வந்தது. அதற்குச் செலவு செய்யப் பரவை யாருக்குப் பொன் தேவையாய் இருந்தது. அவர் பொன் இல்லையே என்று மனம் வருந்

தினர். அவரது மன வருத்தத்தை அறிந்த சுந்தரமூர்த்திநாயனரும் "என் மனைவிக்குக் கொடுக்க என்னிடம் பொன் இல்லையே" என்று மனம் வருந்தினவராய்த் திருப்புகலூர்க் கோவிலுக்குப் போனர்; அங்கே இறைவனை அன்புடன் வணங்கினர். "பொன் இல்லாமல் எப்படி வீட்டுக்குப் போவேன்? பரவையாரின் மன வருத்தத்தை எப்படி நீக்குவேன்?" என்று எண்ணியபடி அக்கோவிலின் மடத்திலே இருந்தார். இறைவனுடைய திருவருளால், அவருக்கு நித்திரை வந்தது. அவர் அம்மடத்திலே கிடந்த செங்கட்டிகளை எடுத்து, தலையணையாக வைத்துக்கொண்டு படுத்தார்.

பின்பு, நாயனர், நித்திரையினின்றும் விழித்து எழுந்து பார்த்தார். தலையணையாக வைத்த செங்கட்டிகள் எல்லாம் பொன்கட்டிகளாய் இருப்பதைக் கண்டார். அவருக்குப் பேரானந்தம் உண்டாயிற்று. அவர் திருப்புகலூர்ப் பெருமானின் கருணையைப் புகழ்ந்து பாடினர். அதன்பின், பொன்கட்டிகளை எடுத்துச்சென்று பரவையாருக்குக் கொடுத்து மகிழ்வித்தார்.

## பயிற்சி

1. சுந்தரமூர்த்தி நாயனருடைய மனைவியார் யார் ?

2. பரவையாருக்கு, ஏன் பொன் தேவைப்பட்டது ?

3. சுந்தரமூர்த்தி நாயனர் பொன்னை எங்கே பெற்ருர் ?

4. கோடிட்ட இடங்களை நிரப்புக :

   (அ) தலையணையாக வைத்த —— எல்லாம் பொன்கட்டிகளாய் இருந்தன.

   (ஆ) பொன்கட்டிகளைக் கண்ட சுந்தரமூர்த்தி நாயனருக்குப் ——— உண்டாயிற்று.

---

பாடம் : 27

# சுந்தரர் தேவாரம்

## திருமழபாடி

ஒருமுறை, சுந்தரமூர்த்தி நாயனாருடைய கனவிலே சிவபெருமான் தோன்றி, "மழபாடிக்கு வர மறந்தாயோ?" என வினவி அருளினார். நாயனார், சிவபெருமான் தம்மை வரும்படி அழைத்தமைக்கு மகிழ்ந்து, மழபாடிக்குச் சென்றார். அவர் அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானை வணங்கி, "நான் உம்மை எப்படி மறப்பேன்; உம்மை அல்லாமல் வேறு யாரை நினைப்பேன்?" என்று, பின்வரும் தேவாரத்தைப் பாடியருளினார்.

*ஏழாந் திருமுறை* *பண் : நட்டராகம்*

*திருச்சிற்றம்பலம்*

பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே
மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்
இனி ஆரை நினைக்கேனே.

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— பொன் ஆர்—பொன் போன்ற. மேனி – திருஉடம்பு. அரைக்கு அசைத்து – அரையிலே கட்டி. மின் ஆர் - ஒளி பொருந்திய. செஞ்சடை - சிவந்த சடை. மிளிர் - விளங்குகின்ற. மன்னே - தலைவரே. அன்னே - தாயானவரே.

பொருள் :— பொன்னைப்போன்ற சிவந்த திருமேனியை உடையவரே, புலியினது தோலை அரையிலே கட்டிச் சடையின் மேலே கொன்றை மாலையை அணிந்தவரே, தலைவரே, மணி போன்றவரே, மழபாடியுள் எழுந்தருளி இருக்கும் மாணிக்கம் போன்றவரே, தாயானவரே உம்மையல்லாமல் நான் வேறு யாரை நினைப்பேன்.

பயிற்சி

1. தேவாரத்தை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக :

பொன்னார் மேனியனே<br>
—— தோலை அரைக்கசைத்து<br>
மின்னார் செஞ்சடைமேல்<br>
மிளிர் —— அணிந்தவனே<br>
மன்னே ——<br>
மழபாடியுள் மாணிக்கமே<br>
—— உன்னையல்லால்<br>
இனி ஆரை நினைக்கேனே.

பாடம்: 28

# கொன்றை வேந்தன் (ஏ)

70. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.

71. மாரி அல்லது காரியம் இல்லை.

72. மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.

73. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.

74. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.

75. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.

76. மெத்தையிற் படுத்தல் நித்திரைக்கு அழகு.

77. மேழிச் செல்வங் கோழை படாது.

78. மைவிழி யார்தம் மனையகன்று ஒழுகு.

79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.

80. மோனம் என்பது ஞான வரம்பு.

பொருள்

70. நீ உண்பது தேவாமிர்தமேயானாலும், விருந்தாளர்களுக்குங் கொடுத்து உண்.

71. மழையினால் அல்லாமல் எக்கருமமும் நடப்பதில்லை.

72. வானத்திலே காணப்படும் மின்னலுக்கு, பின்னே மழை உண்டாகும். அதுபோல, ஒருவரிடம் காணப்படும் நல்ல முயற்சிகளுக்கு, பின்னே பயன் உண்டாகும்.

73. மாலுமி இல்லாத தோணி ஓடாது. அது போல, ஒரு கருமத்தைச் செய்ய வல்லவன் இல்லாவிட்டால், அக்கருமம் முடியாது.

74. முற்பகலில் ஒருவருக்குத் தீமை செய்தால், பிற்பகலிலே அதன் பலன் செய்தவருக்கு உண்டாகும்.

75. கல்வி அறிவுள்ள பெரியோர் சொன்ன வார்த்தை அமிர்தத்தைப் போன்றது.

76. பஞ்சுமெத்தையிலே படுத்தல், நித்திரை செய்வதற்குச் சிறந்தது.

77. உழவுத்தொழிலால் வரும் செல்வம் குறைவு அடையாது.

79 கல்வி அறிவுள்ளவர்கள் சொல்லுகின்ற புத்தி மதியைக் கேளாமற் செய்யுங் கருமங் கெடும்.

80. மௌனமாய் இருக்கும் நிலை, உண்மை அறிவின் எல்லையாகும்.

## பயிற்சி

1. பாடல்களை மனனஞ் செய்க.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக :

மருந்தே ஆயினும் —— உண்.
மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு ——.
—— இல்லா மரக்கலம் ஓடாது.
மொழிவது —— அழிவது கருமம்.

பாடம் : 29

# சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இட்டருளியமை

முன்ெருரு காலத்திலே பாண்டி நாட்டை மலயத்துவசன் என்பவன் ஆட்சி செய்தான். அவன் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி உள்ளவன். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. அதனுல் அவன் சிவபெருமானுக்குப் பல பூசைகள் செய்தான்.

மலயத்துவசனது விருப்பம் நிறைவேறிற்று. அவனுக்கு ஒரு பெண் குழந்தை கிடைத்தது. உமாதேவியாரே அவனுக்கு மகளாய்ப் பிறந்தார். குழந்தைக்குத் தடாதகை எனப் பெயரிட்டான். குழந்தை வளர்ந்தது. அது சிவபெருமானைத் தினமும் பூசை செய்தது. தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் பிரார்த்தித்தது. பிரார்த்தனையை நிறைவேற்றச் சிவபெருமான் இசைந்தார்.

தடாதகைப் பிராட்டியாருக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நடந்தது. திருமணத்துக்குப் பெருந்தொகையான உணவுவகைகள் செய்யப்பட்டன. அந்த உணவுகளில் ஏராளமானவை எஞ்சிக் கிடந்தன. அதனுல், தடாதகைப் பிராட்டியார் வருந்தினுர்.



சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இடுதல்

தடாதகைப் பிராட்டியாரின் வருத்தத்தைச் சிவபெருமான் அறிந்தார். தன்னுடன் வந்த குண்டோதரனுக்குப் பெரும் பசியை உண்டாக்கினுர். அவன், "சுவாமி, பசிக்கிறது, பசிக்கிறது" என்று சிவபெருமானிடம் கூறினுன்.

சிவபெருமான் குண்டோதரனுக்கு உணவு கொடுக்குமாறு பிராட்டியாரிடம் கூறினுர். பிராட்டியார் மகிழ்ச்சியுடன் அவனுக்கு அன்னமிட்டார். அவன் உணவு முழுவதையும் உண்டான். மலை மலையாகக் கிடந்த சோற்றை உண்டான். அண்டாக்களிலே கிடந்த சோறு முழுவதையும் சாப்பிட்டான். கறி வகைகளை உண்டான். பலகாரம், பால், தயிர், நெய், தேன் எதுவும் எஞ்சவில்லை. எல்லா உணவுகளும் முடிந்தன. ஆயினும் குண்டோதரன் "பசிக்கிறது, பசிக்கிறது" என்று சத்தமிட்டான்.

பிராட்டியாருக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. சிவபெருமானிடம் முறையிட்டார்.

சிவபெருமானுடைய அருளினுலே சோறு வந்து கொண்டேயிருந்தது. குண்டோதரன் உண்டு பசியாறினுன். அதனைக் கண்ட பிராட்டியார் மனம் மகிழ்ந்து சிவபெருமானை வணங்கினுர்.

## பயிற்சி

1. தடாதகைப் பிராட்டியார் யாருடைய மகள் ?

2. குண்டோதரன் என்பவன் யார் ? அவனுடைய பசி எப்படி ஆறியது ?

3. தடாதகைப் பிராட்டியாருக்கு முதலில் ஏன் மனவருத்தம் உண்டானது ?

———

பாடம் : 30

# திருப் புராணம்

கோவில்களிலே தேவாரம், திருவாசகம் பாடிய பின்னர் புராணம் பாடுவார்கள். பெரிய புராணம், கந்த புராணம் முதலிய பாடல்களை அதிகமாக நாம் பாடுகிறோம். பெரிய புராணம் சேக்கிழார் சுவாமிகளாற் பாடப்பட்டது. கந்த புராணம் கச்சியப்ப சுவாமிகளாற் பாடப் பட்டது. அப்பாடல்களில் ஒவ்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

## பெரிய புராணம்

*திருச்சிற்றம்பலம்*

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

*திருச்சிற்றம்பலம்*

குறிப்பு :— *நிலவு - சந்திரன்; வேணி—சடை; அம்பலம் - சிதம்பரம்.*

பொருள் :— *சிவபெருமான் உலகத்திலுள்ளவர்களால் இப்படிப்பட்டவரென்று சொல்ல முடியாதவர். மூன்றும் பிறைச் சந்திரனையும் கங்கா நதியையும் அணிந்த சடையை உடையவர். அளவில்லாத ஒளி ரூபமானவர். சிதம்பரத்திலே நடனம் செய்பவர். அவரது மலர் போன்ற பாதங்களை வணங்குவோம்.*



சேக்கிழார் சுவாமிகள்

## கந்த புராணம்

திருச்சிற்றம்பலம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணித்து போற்றுவாம். 2

திருச்சிற்றம்பலம்

குறிப்பு :— மண்ணுலகம் – பூவுலகம், பூமி. மாசற - குற்றம் நீங்கி நன்மை அடைய, எண்ணிய பொருள் - நினைத்த காரியம். எளிதில் முற்றுற – இலகுவிற் கைகூட, களிறு – ஆண் யானை. பண்ணவன் - கடவுள். நுதல் – நெற்றி. நுதல் + கண் — நெற்றிக்கண்.

பொருள் :— இந்த உலகில் எங்களுடைய பிறவி, குற்றம் நீங்கி நன்மை அடைதல் வேண்டும். நாங்கள் நினைத்த காரியங்கள் இலகுவிற் கைகூடுதல் வேண்டும், இவற்றின்பொருட்டு நாங்கள் விநாயகக் கடவுளுடைய திருப்பாதங்களை வணங்கிப் போற்றுவோமாக.

### பயிற்சி

1. திருப் புராணங்களை மனனஞ் செய்க.
2. கோடிட்ட இடங்களை நிரப்புக :

(அ) உலகெலாமுணர்ந் தோதற் ——
நிலவு லாவிய —— வேணியன்
—— சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி —— வணங்குவாம்,

(ஆ) மண்ணுல கத்தினிற் —— மாசற
—— பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் —— மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து ——.

பாடம் : 31

# கந்தசுவாமியாரும் ஔவையாரும்

முற்காலத்திலே தமிழ்நாட்டிலே புலவர்கள் பலர் இருந்தார்கள். அக்காலத்தில் ஔவையார் என்னும் புலவரும் இருந்தார். அவர் ஒரு பெண் புலவர். வயதில் முதிர்ந்தவர். அவர் கந்தசுவாமியாரிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவர். அவரே கொன்றை வேந்தன், ஆத்திசூடி முதலிய பாடல்களை இயற்றியவர்.

ஔவையார் ஓரிடத்திலே தங்கியிருப்பதில்லை. பல ஊர்களுக்கும் செல்லுவார். அவர் தமது கைத்தடியை ஊன்றியபடி நடந்தே செல்லுவார். களைப்பு வந்துவிட்டால் அங்கேயே தங்கிவிடுவார். அவரை அதிகமாக எல்லோருக்கும் தெரியும். அதனால் அவரை எல்லோரும் உபசரிப்பார்கள்.

ஔவையார் ஒரு நாள் காட்டு வழியே நடந்துசென்றார். வெயில் அதிகமாக இருந்தது. அதனால் அவர் களைத்துப் போனார். தாகமும் அதிகரித்தது. பசியும் உண்டானது. அவரால் நடக்க முடியவில்லை. பக்கத்தில் நின்ற ஒரு நாவல்மரத்தின் கீழே இருந்தார்.



ஔவையார் கந்தசுவாமியாரிடம் நாவற்பழங்கள்
தரும்படி வேண்டுதல்

நாவல் மரத்திலிருந்து சில நாவற் பழங்கள் விழுந்தன. நிமிர்ந்துபார்த்தார். ஒரு சிறுவன் மரத்தின் மேலே நின்றுன். அச்சிறுவன் நாவற்பழம் தின்பதை ஒளவையார் கண்டார். "தம்பீ, எனக்கும் நாவற்பழம் போடுவாயா?" என்று கேட்டார்.

"பாட்டி, பாட்டி; உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று சிறுவன் கேட்டான். ஒளவையாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனுலும், "சுட்ட பழம் போடு" என்றுர்.

சிறுவன் நன்ருகப் பழுத்த பழங்களைப் பிடுங்கினுன். அவற்றைக் கீழேயுள்ள மணலிலே எறிந்தான். ஒளவையார் அவற்றைப் பொறுக்கினுர். அந்தப் பழங்களிலே மணல் ஒட்டியிருந்தது. மணல் போக வாயால் ஊதினுர்.

"பாட்டி, பழம் சுடுகிறதா? நன்ருக ஊதிச் சாப்பிடு", என்றுன் சிறுவன். அப்பொழுது தான் ஒளவையாருக்கு, சுட்ட பழம் என்பதன் பொருள் விளங்கிற்று. அவர் வெட்கிப்போனுர். சிறுவனுடைய புத்தியை மெச்சினுர். "தம்பீ, நீ யார்?" என்று கேட்டார்.

"என்னை உனக்குத் தெரியாதா?" என்று சிறுவன் கூறினான். உடனே பச்சை மயி லிலே கந்தசுவாமியார் தோன்றினார். கந்த சுவாமியாரே சிறுவனாக வந்தார் என்பதை அறிந்த ஔவையார் மனமுருகி அவரை வணங்கினார்.

## பயிற்சி

1. ஔவையார் பாடிய இரண்டு நூல்கள் கூறுக.
2. ஔவையார் பாடிய பாடல் ஒன்று எழுதுக.
3. நாவற் பழம் தின்ற சிறுவன் யார்?
4. சுட்ட பழம் என்றால் என்ன?

பாடம் : 32

# கொன்றை வேந்தன் (ஏ)

81. வளவன் ஆயினும் அளவறிந்து அழித்துண்.

82. வானம் சுருங்கிற் ருனம் சுருங்கும்.

83 விருந்திலோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்.

84. வீரன் கேண்மை கூரம்பு ஆகும்.

85. உரவோர் என்கை இரவாது இருத்தல்.

86. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

87. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை.

88. வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.

89. வையந் தோறுந் தெய்வந் தொழு.

90. ஒத்த இடத்து நித்திரை கொள்.

91. ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்.

பொருள்

81. நீ, பெருஞ் செல்வனுய் இருந்தாலும், வரவின் அளவை அறிந்து, அதற்கு ஏற்றதாகச் செலவு செய்து உண்பாயாக.

82. மழை பெய்தல் குறையுமானல், கொடையும் குறைவுபடும்.

83. விருந்தாளரை உபசரியாதவருடைய இல்லறம் பயனில்லாதது ஆகும்.

84. வீரனுடைய சிநேகம் ஒருவருக்கு இருந்தால், அது கூர்மையுடைய அம்புபோல, பகைவரை வெல்வதற்கு உதவும்.

85. தமக்கு வறுமை வந்தபோதும் இரவாமல் இருப்பவரே வல்லவர்.

86. செய்யும் தொழிலிலே மனம் தளராமல் இருத்தல், சிறந்த செல்வத்தைத் தரும்.

87. குற்றம் இல்லாத நற்குணம் உடையவரிடத்திலே, வஞ்சகமான நினைவு இல்லை.

88. அரசன் ஒருவரைக் கோபித்தால், அப்பொழுது அவருக்கு உதவும் துணை ஒருவரும் இல்லை.

89. நீ, பூமியிலுள்ள கோயில்தோறும் போய், கடவுளை வணங்கு.

90. நீ, மேடு பள்ளம் இல்லாத சமமான இடத்திலே நித்திரை கொள்.

91. சிறந்த அறிவு நூல்களைப் படியாதவருக்கு, அறிவும் நல்லொழுக்கமும் உண்டாகா.

பயிற்சி

1. பாடல்களை மனனஞ் செய்க.
2. கோடிட்ட இடங்களை நிரப்புக:

வளவன் ஆயினும் அளவறிந்து ——.
வீரன் —— கூரம்பு ஆகும்.
உரவோர் என்கை —— இருத்தல்.
—— சீறின் ஆந்துணை இல்லை.

குமரன் அச்சகம்,
201, டாம் வீதி,
கொழும்பு-12.